செ.வெ.எண்: 200

நாள்: 08.05.2017

**பத்திரிக்கைச் செய்தி**

அரசாணை (பல்வகை) எண்.65, சமூகநலம் மற்றும் சத்துணவுத்திட்ட(சந8(2))த்துறை, நாள்.19.08.2016-ன்படி, தமிழ்நாடு அரசு, சமூகப்பாதுகாப்புதுறையின் நிறுவனங்களில் காலியாக உள்ள வாத்தியக்குழு ஆசிரியர் (ஊதிய நிரக்கு ரூ. 5200-20200 + தரஊதியம் ரூ. 2400/- மற்றும் இதர படிகள்) 3 காலிபணியிடங்களுக்கும், காலியாக உள்ள புத்தகம் கட்டும் பயிற்றாசிரியர் நிலை-I (ஊதிய நிரக்கு ரூ. 5200-20200 + தரஊதியம் ரூ. 2800/- + தனி ஊதியம் ரூ. 750/- மற்றும் இதர படிகள்) 3 காலிபணியிடங்களுக்கும் மற்றும் புத்தகம் கட்டும் பயிற்றாசிரியர் நிலை-II (ஊதிய நிரக்கு ரூ. 5200-20200 + தரஊதியம் ரூ. 2400/- மற்றும் இதர படிகள்) 1 காலிபணியிடத்திற்க்கும் தச்சுப்பயிற்றாசிரியர் நிலை-1 (ஊதிய நிரக்கு ரூ. 5200-20200 + தரஊதியம் ரூ. 2800/- + தனி ஊதியம் ரூ. 750/- மற்றும் இதர படிகள்) 3 காலிபணியிடங்களுக்கும் மற்றும் தச்சுப்பயிற்றாசிரியர் நிலை-II (ஊதிய நிரக்கு ரூ. 5200-20200 + தரஊதியம் ரூ. 2400/- மற்றும் இதர படிகள்) 1 காலிபணியிடத்திற்க்கும் தொழிற்பிரிவு பயிற்றாசிரியர் பணியிடங்களை சமூகப்பாதுகாப்புத்துறையின் கீழ் இயங்கும் நிறுவனங்களில் கல்வி பயின்ற/பயிலும் மாணவ மாணவியர்களைக் கொண்டு இனசுழற்சி முறையில் நிரப்பப்பட உள்ளது.

தகுதியானவர்கள் இணைப்பில் குறிப்பிட்ட பணியிடங்களுக்கு அதற்கான விண்ணபத்தினை www.socialdefence.tn.gov.in இணைய தள முகவரியில் பதிவிறக்கம் செய்து முழுமையாக பூர்த்தி செய்து உரிய கல்வி, வயது, தொழிற்கல்வி மற்றும் இதர சான்றுகளுடன் முன்னாள் மாணவ/மாணவியர் என்பதற்கான சான்றின் ஒளிநகலுடன்10.05.2017- க்குள் கீழ்குறிப்பிட்ட முகவரிக்கு வந்து சேரும்வண்ணம் விண்ணப்பிக்குமாறு தெரிவிக்கப்படுகிறது.

முகவரி:
ஆணையர்,
சமூகப்பாதுகாப்புத்துறை,
300, புரசைவாக்கம் நெடுஞ்சாலை,
கெல்லிஸ், சென்னை 600010
தொலைபேதி எண் 044-26426421, 044-26427022 விரிவு எண்.120